அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப் பள்ளி, பரந்தூர்.

காஞ்சிபுரம் மாவட்டம். 631552

# 12 - ஆம் வகுப்பு

# கணக்குப்பதிவியல்

( 2019 - 2020)

## கருத்தியல் வினாக்கள்

B. BALAJI,
P.G. ASSISTANT IN COMMERCE,
GOVT. HR. SEC. SCHOOL,
PARANTHUR,
KANCHEEPURAM DISTRICT.
9629647613

# அலகு 1. முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

## சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   அ) நிறுமம் ஆ) அரசு இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்
   ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. நிலை அறிக்கை ஒரு -----------
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
3. தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
   அ) தொடக்க முதல் கண்டறிய ஆ) இறுதி முதல் கண்டறிய
   இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய
4. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்
5. கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?
   அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு
   ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு
   இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு
   ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது
6. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
7. முழுமைபெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?
   அ) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை
   ஆ) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது.
   இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்
   ஈ) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை.
8. உரிமையாளரின் சொத்துகள் ₹. 85,000 மற்றும் பொறுப்புகள் ₹. 21,000 எனில்அவருடைய முதல் தொகை -----------
   அ) ₹. 85,000 ஆ) ₹. 1,06,000 இ) ₹. 21,000 ஈ) ₹. 64,000
9. தொடக்க முதல் ₹. 10,000, அவ்வாண்டின் எடுப்புகள் ₹. 6,000, அவ்வாண்டின் இலாபம் ₹. 2,000 மற்றும் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹. 3,000 எனில் இறுதி முதல் காணவும்.
   அ) ₹. 9,000 ஆ) ₹. 11,000 இ) ₹. 21,000 ஈ) ₹. 3,000
10. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹. 30,000, பெற்ற ரொக்கம் ₹. 1,00,000, கடன் விற்பனை ₹.90,000; கடனாளிகள் இறுதி இருப்பு ?
    அ) ₹. 30,000 ஆ) ₹. 1,30,000 இ) ₹. 40,000 ஈ) ₹. 20,000

**விடைகள் :**

1. இ 2. ஆ 3. அ 4. இ 5. இ 6. அ 7. இ 8. ஈ 9. அ 10. ஈ

## மிகக்குறுகிய வினாக்கள்

1. **முழுமைபெறா பதிவேடுகள் என்றால் என்ன?**
   - ❖ கணக்கேடுகள், இரட்டைப் பதிவு முறையின்படி பராமரிக்கப்படாத போது, அந்த பதிவேடுகள் முழுமைபெறா கணக்கியல் பதிவேடுகள் என்று அழைக்கப்படுகின்றன.
   - ❖ பொதுவாக, ரொக்கக் கணக்கு மற்றும் ஆள்சார்கணக்குகளை மட்டும் முழுமையாகவும், பிறகணக்குகள், தேவைக்கு ஏற்பவும் பராமரிக்கப்படுகின்றன.

2. **இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.**
   - ❖ ரொக்கக் கணக்கு மற்றும் ஆள்சார்கணக்குகளான வாடிக்கையாளர் மற்றும் கடனீந்தோர் கணக்கு மட்டுமே முழுமையாகவும், பிறகணக்குகள், தேவைக்கு ஏற்பவும் பராமரிக்கப்படுகின்றன.

3. **நிலைஅறிக்கை என்றால் என்ன?**
   - ❖ நிலை அறிக்கை என்பது, ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக் காட்டும் ஒரு அறிக்கை ஆகும்.
   - ❖ சொத்துகளின் இருப்புகள் வலது பக்கமும் மற்றும் பொறுப்புகளின் இருப்புகள் இடது பக்கத்திலும் காண்பிக்கப்பெறும்.
   - ❖ ஒரு வியாபார நிறுவனத்தின், ஒரு குறிப்பிட்ட நாளுக்கான முதலைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது.

## குறுகிய வினாக்கள்

1. **முழுமைபெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?**

   1) <u>தன்மை:</u>
   - ❖ இது நடவடிக்கைகளை அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும்.
   - ❖ இதில் கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் தரநிலைகள் முறையாகப் பின்பற்றப்படுவது இல்லை.

   2) <u>பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள்:</u>
   - ❖ பொதுவாக, ரொக்கம் மற்றும் ஆள்சார்கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன.
   - ❖ சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை.
   - ❖ சிலநடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவதே இல்லை.

   3) <u>சீரற்றத் தன்மை:</u>
   - ❖ பல்வேறு நிறுவனங்களுக்கிடையில், நடவடிக்கைகளை பதிவு செய்வதில் சீரற்றத் தன்மை காணப்படுகிறது.
   - ❖ வெவ்வேறு நிறுவனங்கள், தங்கள் தேவைகள் மற்றும் வசதிகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளைப் பதிவு செய்கின்றன.

   4) <u>நிதிநிலை அறிக்கைகள் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலையை வெளிப்படுத்தாது:</u>
   - ❖ முழுமையற்ற தகவல்கள் மற்றும் துல்லியமற்ற கணக்கேடுகள் என்பதால், இவ்வேடுகளிலிருந்து கண்டறியப்படும் இலாபம் அல்லது நட்டம் நம்பகத்தன்மை உடையதல்ல.
   - ❖ இது உண்மையான இலாபத் தன்மையை வெளிப்படுத்துவதில்லை.

   5) <u>பொருந்தும் தன்மை:</u>
   - ❖ கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பின்பற்ற, சட்டப்படியான கடமையுள்ள நிறுவனங்கள் அல்லாத பிறநிறுவனங்கள், முழுமைபெறா பதிவேடுகளைப் பராமரிக்கலாம்.

- ❖ எனவே, சிறு அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை கணக்குகள் இம்முறையில் பராமரிக்கலாம்.

6) <u>வியாபார நடவடிக்கைகளுடன் உரிமையாளரின் நடவடிக்கைகளும் பதியப்படுதல்</u>:
- ❖ பொதுவாக, உரிமையாளரின் தனிப்பட்ட நடவடிக்கைகள், வியாபார நடவடிக்கைகளுடன் கலந்து பதியப்படுகிறது.
- ❖ உதாரணமாக, சொந்தப் பயனுக்காக சரக்குகள் வாங்கியது, வியாபாரக் கொள்முதலுடன் சேர்த்து பதிவு செய்யப்படுகிறது.

---

## 2. முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?

1) <u>பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை:</u>
- ❖ இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும்.
- ❖ சொத்துக் கணக்குகள் மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவது இல்லை.

2) <u>இருப்பாய்வு தயாரிப்பது கடினம்</u>:
- ❖ கணக்குகள், எல்லா விவரங்களுக்கும் பராமரிக்கப்படாததால், கணக்கேடுகள் முழுமையற்றதாக உள்ளன.
- ❖ எனவே, கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிந்து கொள்ள, இருப்பாய்வினைத் தயாரிப்பது கடினம்.

3) <u>வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனைகண்டறிவது கடினம்:</u>
- ❖ இலாபம், பெறப்படும் தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து கணக்கிடப் படுகிறது. எனவே, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாததால் உண்மையான இலாபத்தை கண்டறிவது கடினம்.

4) <u>வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிதல் கடினம்</u>:
- ❖ பொதுவாக, முழுமைபெறா பதிவேடுகளிலிருந்து, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மதிப்பீடுகள் மட்டுமே பெறப்படுகிறது.
- ❖ எனவே, ஒரு குறிப்பிட்ட நாளின் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலைத் தன்மை அல்லது நிதி நிலையை கண்டறிவது கடினமாக உள்ளது.

5) <u>தவறுகள் மற்றும் மோசடிகள் எளிதாக கண்டறிய முடியாது:</u>
- ❖ பதிவேடுகளின் ஒரு பகுதி மட்டுமே பெறப்படுவதால், கணக்கேடுகள் பராமரித்தலின் போது, அகச் சோதனை செய்து, தவறுகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிய முடியாமல் இருக்கலாம்.

6) <u>அரசு மற்றும் பிற அதிகாரிகளுக்கு ஏற்புடையதல்ல:</u>
- ❖ பராமரிக்கப்படும் கணக்குகள் முழுமையற்றதாக இருப்பதால், இம்முறையில் சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கலாம்.
- ❖ எனவே, அரசு, வரி அதிகாரிகள் மற்றும் பிற சட்ட அதிகாரிகள், முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து தயாரிக்கப்படும் கணக்குகளை ஏற்றுக் கொள்வது இல்லை.

---

3. **இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| அடைப்படை | இரட்டைப்பதிவு முறை | முழுமைபெறா பதிவேடுகள் |
|---|---|---|
| நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப் படுகின்றன | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு தன்மைகள் முழுமையாகப் பதிவு செய்யப் படுவதில்லை |
| பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள் | ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முழுமையாகப் பராமரிக்கப் படுகின்றன. | ஆள்சார் மற்றும் ரொக்க கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப் படுகின்றன.<br>சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முழுமையாகப் பராமரிக்கப்படுவதில்லை |
| இருப்பாய்வு தயாரித்தல் | கணக்கேடுகளில் பதிவு செய்த பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை சோதித்துப் பார்க்க, இருப்பாய்வு தயாரிக்க முடியும் | கணக்குகள் முழுமையற்றதாக இருப்பதால், கணக்கேடுகளில் பதிவு செய்த பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை சோதித்துப் பார்க்க, இருப்பாய்வு தயாரிப்பது கடினம் |
| சரியான இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல் | சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. | முழுமையான தகவல்கள் பெற முடியாததால், வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாது. |
| நிதிநிலையினை கண்டறிதல் | உண்மையான நிதிநிலையினை தெரிந்துகொள்ள , இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க முடியும் | சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வெறும் மதிப்பீடுகள் மற்றும் முழுமையற்றதாக இருப்பதால், இருப்புநிலைக் குறிப்பு துல்லியமாக தயாரிக்க முடியாது |
| பொருந்தும் தன்மை | இது அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தும் தன்மை கொண்டது | இது, சிறிய அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்ஙளுக்கு பொருந்தும் |
| நம்பகத்தன்மை | இது, அறிவியல் பூர்வமான கணக்கியல் முறை மற்றும் சில கணக்கியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நம்பகத்தன்மையுடையது | இது, அறிவியல் பூர்வமான தன்மையற்றதால், நம்பகத்தன்மை அற்றது |
| ஏற்புத் தன்மை | கணக்கியல் பதிவேடுகள், வரி அதிகாரிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்து பயனாளர்களுக்கும் ஏற்புடையதாகும் | கணக்கியல் பதிவேடுகள், அனைத்து பயனாளர்களுக்கும் ஏற்புடையது அல்ல |

4. **நிலைஅறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறியும் படிநிலைகளைத் தரவும்.**

❖ நிலையறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிநிலைகள் பின்வருமாறு:

i) ஆண்டு தொடக்கத்தில் உள்ள சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இருப்புகளைக் கொண்டு தொடக்க நிலையறிக்கை தயாரித்து, தொடக்க முதலைக் கண்டறியவும்.

ii) கணக்காண்டின் இறுதியில் தேய்மானம், வாராக்கடன், கொடுபடவேண்டிய மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள், பெறவேண்டிய வருமானம், முதல்மீது வட்டி, எடுப்பு மீது வட்டி போன்றவற்றிற்குத் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்த பின், இறுதி நிலையறிக்கை தயாரித்து, இறுதி முதல் கண்டறியவும்.

iii) இறுதி முதலுடன் எடுப்புத் தொகையினை (பணம் மற்றும் / பொருட்கள் இரண்டும்) கூட்டவும்.

iv) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலைக் கண்டறிய, கூடுதல் முதலைக் கழிக்கவும்.

v) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலிலிருந்து, தொடக்க முதலைக் கழித்து, இலாபம் அல்லது நட்டத்தினைக் கண்டறியவும்.

அ) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலானது, தொடக்க முதலைவிட அதிகமானதாக இருந்தால், அது இலாபத்தைக் குறிக்கும்.

ஆ) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலானது, தொடக்க முதலைவிட குறைவானதாக இருந்தால், அது நட்டத்தைக் குறிக்கும்.

---

5. **நிலைஅறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

| அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| 1.நோக்கம் | இது, வியாபாரத்தின் முதலைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது | இது, வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது |
| 2.கணக்கியல் முறை | இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது, நிலையறிக்கை தயாரிக்கப்படும். | இரட்டைப்பதிவு முறையில் கணக்குகள் பராமரிக்கப்படும் போது, இருப்புநிலை குறிப்பு தயாரிக்கப்படும். |
| தயாரிப்பின் அடிபடை | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது |
| நம்பகத்தன்மை | இது, முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நம்பகத்தன்மை உடையது அல்ல | இது, இரட்டைப்பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால், நம்பகத்தன்மை உடையது. |
| விடுபட்ட விவரங்கள் | ஏடுகள் முழுமையாக பராமரிக்கப்படாததால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம். | அனைத்து நடவடிக்கைகளின் இரண்டு தன்மைகளும் பதியப்படுவதால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது எளிது. |

---

6. **முழுமைபெறா பதிவேடுகளிலிருந்து கடன் விற்பனைத் தொகை எவ்வாறு கண்டறியப்படுகிறது?**

- **மொத்த கடனாளிகள் கணக்கு தயாரிக்கப்பட்டு, கடன் விற்பனை தொகை கண்டறியப்படுகிறது.**
- **<u>மொத்த கடனாளிகள் கணக்கின் படிவம்</u>**

ப　　　　மொத்த கடனாளிகள் கணக்கு　　　　வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | xxx | ரொக்கக் க/கு (பெற்றது) | xxx |
| விற்பனை க/கு (கடன் விற்பனை) | xxx | வங்கி க/கு (காசோலைகள் பெற்றது) | xxx |
| வங்கி க/கு (காசோலை மறுக்கப்பட்டது) | xxx | அளித்த தள்ளுபடி க/கு | xxx |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) | xxx | விற்பனைத் திருப்பக் க/கு | xxx |
| | | வாராக்கடன் க/கு | xxx |
| | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு பெற்றது) | xxx |
| | | இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | xxx |
| | xxx | | xxx |

# <u>அலகு 2.</u> <u>இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்</u>

## <u>சரியான விடையைத் தேர்வு செய்யவும்</u>

1. **பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு ----------**

   அ) பெயரளவு கணக்கு　　　ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு　　　ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

2. **பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் -----------**

   அ) வருவாயினத் தன்மை மட்டும் உடையது　　　ஆ) முதலினத் தன்மை மட்டும் உடையது
   இ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது　　　ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

3. **பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது**

   அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்
   ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்
   இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள்
   ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு

4. **வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு -----------**

   அ) பெயரளவுக் கணக்கு　　　ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு　　　ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

5. **வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது-----------**

   அ) இலாபம் அல்லது நட்டம்　　　ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை　　　ஈ) நிதிநிலை

6. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?
அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்
இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் ஈ) அறைகலன் விற்ற தொகை

7. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது ------------
அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு
இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

8. உயில்கொடை ஒரு ------------
அ) வருவாயினச் செலவு ஆ) முதலினச் செலவு
இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு

9. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை -----------
அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு
இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு

10. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ₹. 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹.200 ; முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹. 300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.
அ) ₹. 50,000 ஆ) ₹. 50,200 இ) ₹. 49,900 ஈ) ₹. 49,800

**விடைகள்**

1. ஆ 2. இ 3. ஈ 4. அ 5. அ 6. ஈ 7. அ 8. ஈ 9. ஆ 10. அ

## மிகக் குறுகிய வினாக்கள்

### 1. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.

- இலாப நோக்கம் இல்லாமல் செயல்படும் அமைப்புகளே, இலாப நோக்கற்ற அமைப்புகள் எனப்படும்.
- அவற்றின் முக்கிய நோக்கம், ஒரு குறிப்பிட்ட குழுவிற்கோ அல்லது பெரும்பாலான பொதுமக்களுக்கோ சேவை செய்வதாகும்.
- அறக்கொடை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பண்பாட்டு மன்றங்கள், விளையாட்டு மற்றும் மனமகிழ் மன்றங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள் மற்றும் இலக்கிய அமைப்புகள் போன்றவை இலாப நோக்கற்ற அமைப்புகளுக்கு உதாரணங்கள் ஆகும்.

### 2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?

- பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது, ஒரு இலாப நோக்கற்ற அமைப்பில், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும், ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.
- இது ஒரு சொத்துக் கணக்கின் தன்மையைக் கொண்டதாகும்.
- பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு, தொடக்க ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு தொடங்கப்பட்டு, இறுதி ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு முடிவடைகிறது.

3. **உயில்கொடை என்றால் என்ன?**
   - ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு, உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும்.
   - இது ஒரு முதலின வரவாகும்.

4. **ஆயுள் உறுப்பினர் கட்டணம் - சிறு குறிப்பு தரவும்.**
   - உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம், ஒரு முதலின வரவாகும்.
   - ஏனெனில், இது திரும்பத் திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.

5. **இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.**
   1) ஆயுள் உறுப்பினர் கட்டணம்
   2) உயில்கொடை
   3) குறிப்பிட்ட நன்கொடை
   4) சிறப்பு நிதி
   5) பரிசு நிதி
   6) நிலைச் சொத்துகள் விற்றது

6. **இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.**
   1) சந்தா
   2) முதலீடுகள்
   3) நிலை வைப்பு மீதான வட்டி
   4) பழைய விளையாட்டுப் பொருள்கள் விற்றது
   5) பழைய செய்தித்தாள்கள் விற்றது
   6) பொது நன்கொடை

## குறுகிய வினாக்கள்

1. **வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?**
   - வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்பது, இலாப நோக்கற்ற அமைப்புகளில், கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் வருவாய் மற்றும் செலவுகளின் தொகுப்பாகும். ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய, வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.
   - இது ஒரு பெயரளவு கணக்கு ஆகும். இதில், நடப்பு ஆண்டுக்குரிய வருவாயின வரவுகள் மற்றும் வருவாயினச் செலவுகள் மட்டும் பதிவு செய்யப்படுகின்றன.
   - இது நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை பின்பற்றி தயாரிக்கப்படுகிறது.

2. **பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

| அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|
| நோக்கம் | இது, ரொக்கப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது | இது நடப்பு ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி) அல்லது வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள் ( பற்றாக்குறை ) குறித்து அறிந்துகொள்ள தயாரிக்கப்படுகிறது |
| கணக்கின் தன்மை | இது, ஒரு சொத்துக் கணக்காகும். இது, ரொக்கக் கணக்கின் தொகுப்பாகும். அனைத்து ரொக்கப் பெறுதல்கள் பற்றுப் பக்கத்திலும், ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன | இது, ஒரு பெயரளவுக் கணக்காகும். இது, இலாபநட்ட கணக்கைப் போன்றதாகும். செலவுகள் பற்றுப் பக்கத்திலும், வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன |
| கணக்கியலின் அடிப்படை | இது, ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது | இது, நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது |
| தொடக்கம் மற்றும் இறுதி இருப்பு | இது, தொடக்க ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு தொடங்கப்பட்டு, இறுதி ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு முடிவடைகிறது. | இங்கு தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது |
| நடவடிக்கையின் தன்மைகள் | இது வருவாயினம் அல்லது முதலினம் என்ற வேறுபாடு இல்லாமல், அனைத்துப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்களைக் கொண்டிருக்கும் | இது வருவாயின நடவடிக்கைகளை மட்டுமே, அதாவது வருவாயினச் செலவுகள் மற்றும் வருவாயின வரவுகள் மட்டுமே கொண்டிருக்கும். |
| காலம் | நடப்பு ஆண்டில் மேற்கொண்ட அனைத்து ரொக்கப் பெற்தல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள், அவை கடந்து ஆண்டு, நடப்பு ஆண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டிற்குரியதாக இருந்தாலும், இங்கு பதியப் படுகின்றன. | நடப்பு ஆண்டிற்குரிய நடவடிக்கைகள் மட்டும் இது கொண்டிருக்கும். |

3. **இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக்கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?**

❖ **<u>இலாப நோக்கற்ற அமைப்புகளின் இறுதி கணக்குகளில் சந்தாவிற்கான செயல்முறைகள்</u>**

**அ) <u>வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் செயல்முறைகள்</u>**

❖ நடப்பு ஆண்டு, முந்தைய ஆண்டு, அடுத்த ஆண்டிற்கான சந்தா பெற்றது தனித்தனியாக கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பு ஆண்டிற்குரிய சந்தா, கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களை

செய்த பின்பு, வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காண்பிக்கப் பெறும்.

i) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற, நடப்பாண்டிற்குரிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

❖ நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா, பின்வரும் சரிக்கட்டுதல்களை செய்த பின்னர், வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காட்டப்பெறும்.

i) முந்தைய ஆண்டுக்குரிய பெறவேண்டிய சந்தா, நடப்பு ஆண்டில் பெறப்பட்டிருந்தால் கழிக்கப்பட வேண்டும். நடப்பாண்டிற்குரிய பெறவேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தாவில், நடப்பாண்டிற்கு உரியது கூட்டப்பட வேண்டும். நடப்பாண்டில், முன்கூட்டிப் பெற்ற சந்தாவில், எதிர்வரும் ஆண்டிற்குரியது கழிக்கப்பட வேண்டும்.

ஆ) <u>இருப்புநிலைக்குறிப்பில் செயல்முறைகள்</u>

i) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா மற்றும் இன்னும் பெறவேண்டிய முந்தைய ஆண்டிற்குரிய சந்தா போன்றவை, அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

ii) நடப்பு ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா, அவ்வாண்டின் இருப்பு நிலைக்குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

---

**4. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதி கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன?**

அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை

ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்

இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி

அ) <u>விளையாட்டுப் பொருள்கள் விற்பனை</u>

i) நடப்பாண்டில் பயன்படுத்தப்பட்ட விளையாட்டுச் சாதனங்கள், எழுது பொருள்கள், மருந்து பொருள்கள் போன்றவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் காட்டப்பட வேண்டும்.

ii) பயன்படுத்தப்பட்டவை = தொடக்க இருப்பு + நடப்பு ஆண்டில் வாங்கியது - இறுதிஇருப்பு

iii) இறுதி சரக்கிருப்பு, அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் தோன்றும்.

iv) பழைய விளையாட்டுச் சாதனங்கள் ஏதேனும் விற்பனைச் செய்யப்பட்டிருந்தால், அவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காட்டப்படவேண்டும் அல்லது வருவாய் மற்றும் செலவினக் கணக்கின், பற்றுப் பக்கத்தில் குறிப்பிட்ட, பயன்படுத்தப்பட்ட பொருள்களில், கழித்துக் காட்டப்பட வேண்டும்.

ஆ) <u>ஆயுள் உறுப்பினர் கட்டணம்</u>

❖ உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர்கட்டணம் ஒரு முதலின வரவாகும்.

இ) <u>தொடர் விளையாட்டுப் போட்டி நிதி</u>

❖ தொடர்விளையாட்டுப் போட்டி நிதி, இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம் தனியாக காண்பிக்கப்பட வேண்டும்.

❖ நிதிக்கான வருமானம் ஏதாவது இருந்தால், அவை நிதிக்கணக்குடன் கூட்டப்பட வேண்டும் மற்றும்,

❖ நிதித் தொடர்பான செலவுகள் இருப்புநிலைக் குறிப்பில் நிதிக்கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

## அலகு 3. கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள்-- அடிப்படைகள்

### சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   அ) சமமானவிகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில்
   இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

2. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி
   அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
   இ) ஆண்டுக்கு 5 % வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

3. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 -ன்படி வழங்கப்படும் வட்டி வீதம் -------------
   அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12% இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%

4. பின்வருவனவற்றில் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
   அ) அலுவலகச் செலவுகள் ஆ) பணியாளர் ஊதியம்
   இ) கூட்டாளியின் ஊதியம் (ஈ) வங்கிக்கடன் மீதான வட்டி

5. கூட்டாண்மை நிறுவனத்தில், நிலைமுதல் முறை பின்பற்றப்படும்போது, பின்வருவனவற்றுள் எது முதல் கணக்கில் காட்டப்படும்?
   அ) கூடுதல் முதல் கொண்டு வந்தது ஆ) முதல் மீது வட்டி
   இ) எடுப்புகள்மீது வட்டி ஈ) இலாபப்பகிர்வு

6. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
   அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

7. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
   அ) எடுப்புகள்மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
   இ) கடன்மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஈ) இலாபப்பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

8. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
   அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன்மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி

9. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.
   ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்.
   இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது.
   ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன்மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

10. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்தபின் உள்ளஇலாபம் ₹. 10,500. கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப்பின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின் கழிவுத் தொகையை கண்டறியவும்.
    அ) ₹. 50 ஆ) ₹. 150 இ) ₹. 550 ஈ) ₹. 500

### விடை

1. அ 2. அ 3. ஈ 4. இ 5. அ 6. ஆ 7. இ 8. இ 9. ஆ 10. ஈ

## <u>மிகக் குறுகிய வினாக்கள்</u>

1. **கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்.**
   - இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 பிரிவு 4 - ன்படி கூட்டாண்மை என்பது, " எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ, நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" ஆகும்.

2. **கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?**
   - கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது, கூட்டாளிகளுக்கு இடையேயான உடன்படிக்கையின் விதிகளை உள்ளடக்கிய, எழுத்து வடிவிலான ஒரு ஆவணம் ஆகும்.

3. **நிலைமுதல் முறை என்றால் என்ன?**
   - கூட்டாளிகளின் முதல்தொகை மாறாமல், பொதுவாக அதே தொகையாக, நிலையானதாக இருப்பதையே நிலைமுதல் முறை என்றழைக்கப் படுகின்றது.
   - இம் முறையில், ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும். அதாவது, முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு.

4. **கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க, மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன?**

அ) <u>முதல்மீது வட்டி வழங்கும் போது</u>

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | முதல் மீது வட்டி க/கு ப<br>கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு | | XXX | <br>XXX |

ஆ) <u>முதல்மீது வட்டி கணக்கினை முடிக்கும் போது</u>

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | இலாபநட்ட பகிர்வு க/கு ப<br>முதல் மீது வட்டி க/கு | | XXX | <br>XXX |

5. **இலாபநட்டப் பகிர்வு கணக்கு ஏன் தயாரிக்கப்பட வேண்டும்?**
   - இலாபநட்டப் பகிர்வு கணக்கு இலாபநட்டக் கணக்கின் நீட்டிப்பாகும்.
   - இது கூட்டாளிகளிடமிருந்து பெற வேண்டிய தொகை மற்றும் கூட்டாளிகளுக்குச் செலுத்த வேண்டியது தொடர்பான நடவடிக்கைகளைச் சரிக்கட்டும் நோக்கத்திற்காக இலாபநட்டப் பகிர்வு கணக்கு தயாரிக்கப்படுகிறது.

## குறுகிய வினாக்கள்

1. **கூட்டாண்மையின் சிறப்பியல்புகளைத் தரவும்.**
   1) கூட்டாண்மை என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் உருவாக்கப்படும் ஒரு அமைப்பு ஆகும். அதிக பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 என வரையறை செய்யப்பட்டுள்ளது.
   2) தொழில் நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தைப் பகிர்ந்து கொள்ள கூட்டாளிகளுக்கிடையே உடன்பாடு இருக்கவேண்டும். உடன்பாடு எழுத்து வடிவிலோ அல்லது பேச்சு வடிவிலோ அல்லது உட்கிடையாகவோ இருக்கலாம்.
   3) கூட்டாண்மை உடன்பாடு, ஒரு தொழில் நிறுவனத்தை நடத்தி, அதிலிருந்து கிடைக்கும் இலாபத்தைப் பகிர்வதாக இருக்கவேண்டும்.
   4) கூட்டாண்மை நிறுவனத்தை கூட்டாளிகள் அனைவருமோ அல்லது அனைவரின் சார்பில் அவர்களில் ஒருவரோ நடத்தலாம்

2. **கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.**
   1. நிறுவனத்தின் பெயர், தன்மை மற்றும் தொழில் செய்யும் இடம்
   2. தொழில் தொடங்கிய நாள் மற்றும் தொழிலின் கால அளவு
   3. அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
   4. ஒவ்வொரு கூட்டாளியும் அளித்த முதல்
   5. இலாபப்பகிர்வு விகிதம்
   6. ஒவ்வொரு கூட்டாளிக்கும் அனுமதிக்கப்பட்ட எடுப்புத் தொகை
   7. முதல் மீது அனுமதிக்கப்படும் வட்டி வீதம்
   8. கூட்டாளிகளின் எடுப்புகள் மீதான வட்டி வீதம்
   9. கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன்மீதான வட்டி வீதம்
   10. கூட்டாளிக்கு அனுமதிக்கப்படும் ஊதியம்

3. **நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.**

| அடிப்படை | நிலை முதல் | மாறுபடும் முதல் |
|---|---|---|
| 1. கணக்குகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் அதாவது, முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு பராமரிக்கப்படுகின்றன. | ஒவ்வொரு கூட்டாளிக்கும் ஒரே ஒரு கணக்கு அதாவது, முதல் கணக்கு மட்டும் பராமரிக்கப்படுகின்றன. |
| 2. முதல் தொகையில் மாற்றம் | கூடுதல் முதல் கொண்டு வரும்போது அல்லது முதல் தொகையை நிரந்தரமாக திரும்ப எடுக்கும் போது தவிர, மற்ற நேரங்களில் முதல் தொகை வழக்கமாக மாறாமல், நிலையாக இருக்கும். | முதல் தொகை பருவந்தோறும் மாறிக்கொண்டே இருக்கும் |
| 3. இறுதி இருப்பு | முதல் கணக்கு எப்பொழுதும் வரவு இருப்பையே காட்டும். ஆனால், நடப்புக் கணக்குகள் பற்று இருப்பையோ அல்லது வரவு இருப்பையோ காட்டும் | முதல் கணக்குகள் பொதுவாக வரவு இருப்பையே காட்டும். இது பற்றிருப்பையும் கூட காட்டலாம். |
| 4. சரிக்கட்டுதல்கள் | கூட்டாளிகள் சம்பந்தப்பட்ட அனைத்து சரிக்கட்டுதல்களும் நடப்புக் கணக்கில் பதியப்படும் | அனைத்து சரிக்கட்டுதல்களும் முதல் கணக்கில் பதிவு செய்யப்படும் |

4. **கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 - ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறு குறிப்பு தரவும்.**

1) <u>கூட்டாளிகளின் ஊதியம் [பிரிவு 13(அ)]</u>
   - ❖ எந்த கூட்டாளிக்கும் ஊதியம் அல்லது உழைப்பு ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை.

2) <u>இலாபப் பகிர்வு விகிதம் [பிரிவு 13(ஆ)]</u>
   - ❖ இலாபங்கள் அல்லது நட்டங்களை கூட்டாளிகள் சமமாகப் பகிர்ந்துக் கொள்ளவேண்டும்.

3) <u>முதல்மீது வட்டி [பிரிவு 13(இ)]</u>
   - ❖ கூட்டாளிகளின் முதல் மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை. கூட்டாளி ஒருவர் கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி, தான் அளித்த முதல் தொகைக்கு முதல் மீது வட்டி பெற உரிமை உடையவராயின், அந்த முதல் மீது வட்டி இலாபத்திலிருந்து மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

4) <u>கூட்டாளிகளிடமிருந்து நிறுவனத்திற்காக பெறப்பட்ட கடன் மீதான வட்டி [பிரிவு 13(ஈ)]</u>
   - ❖ கடன்மீதானவட்டி ஆண்டுக்கு 6% வழங்கப்பட வேண்டும்.

5) <u>எடுப்புகள் மீது வட்டி</u>
   - ❖ கூட்டாளிகளின் எடுப்புகள் மீது வட்டி விதிக்கக் கூடாது.

---

5. **ஜெயராமன் என்ற கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ₹. 10,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள்மீது வட்டி கணக்கிடவும்.**

<u>எடுப்புகள் ஒவ்வொரு மாத நடுவிலும் எடுத்திருந்தால்:</u>

சராசரி காலம் = 6

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத் தொகை x வட்டி வீதம் x $\frac{\text{சராசரி காலம்}}{12}$

= ₹.10,000 x $\frac{6}{100}$ x $\frac{6}{12}$

எடுப்புகள் மீது வட்டி = **₹. 300**

---

## <u>அலகு 4. கூட்டாணமை கணக்குகள்-- நற்பெயர்</u>

### <u>சரியான விடையைத் தேர்வு செய்யவும்</u>

1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?

   அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து  ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

   இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து  ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

2. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்

   அ) பயன்படுத்தப்பட்டமுதல் மற்றும் சராசரி இலாபம்

   ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்

   இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்

   ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

3. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது

அ) சராசரி இலாபம் ஆ) சாதாரண இலாபவிகிதம்

இ) எதிர்நோக்கும் இலாபவிகிதம் ஈ) இவைகளில் ஏதுமில்லை

4. கீழ் வருவனவற்றில் எது சரியானது?

அ) உயர் இலாபம் = மொத்தஇலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்

ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்

5. சரியற்ற இணையினை அடையாளம் காணவும்

அ) சராசரி இலாப முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

ஆ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

இ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத் தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

ஈ) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

6. சராசரி இலாபம் ₹. 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹. 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்

அ) ₹. 25,000 ஆ) ₹. 5,000 இ) ₹. 10,000 ஈ) ₹. 15,000

7. 2017- ல் கணக்கேட்டின்படி இலாபம் ₹. 35,000 ; இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹. 1,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண நட்டம் ₹. 2,000 எனில், சரிக்கட்டப்பட்ட இலாபம்

அ) ₹. 36,000 ஆ) ₹. 35,000 இ) ₹. 38,000 ஈ) ₹. 34,000

8. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹. 1,00,000; சொத்துகள் ₹. 1,50,000 மற்றும் பொறுப்புகள் ₹. 80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு -----------

அ) ₹. 40,000 ஆ) ₹. 70,000 இ) ₹. ₹ 1,00,000 ஈ) ₹. 30,000

**விடைகள்**

1. அ 2. இ 3. ஆ 4. இ 5. இ 6. இ 7. அ 8. ஈ

## மிகக் குறுகிய வினாக்கள்

1. **நற்பெயர் என்றால் என்ன?**
    - ஒரு தொழிலுக்கு நன்மையை தரக்கூடிய, அத் தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும்.
    - இது, அத்தொழில் அதிக இலாபம் ஈட்ட உதவுகிறது.
    - இது எதிர்காலத்தில் நிறுவனம் மிகுதியாக ஈட்டக்கூடிய வருமானங்களின், தற்போதைய மதிப்பு ஆகும்.
    - இது ஒரு புலனாகாச் சொத்து ஆகும்.

2. **வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?**
   - ❖ நற்பெயரானது, ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால், அது வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயர் என்று அழைக்கப்படுகிறது.

3. **உயர் இலாபம் என்றால் என்ன?**
   - ❖ ஒரு வியாபாரத்தின் உயர் இலாபம் என்பது, சாதாரண இலாபத்தைவிட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் ஆகும்.

| உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம் |
|---|

4. **சாதாரண இலாபவிகிதம் என்றால் என்ன?**
   - ❖ சாதாரண இலாபம் விகிதம் என்பது, ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில், வழக்கமாக ஈட்டும் இலாப விகிதம் ஆகும்.

5. **கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.**
   - i) இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றம் ஏற்படும்போது
   - ii) கூட்டாண்மை நிறுவனத்தில், புதிய கூட்டாளி சேர்க்கப்படும்போது
   - iii) கூட்டாண்மை நிறுவனத்தில் இருக்கும் கூட்டாளி ஒருவர், நிறுவனத்தைவிட்டு விலகும் போது அல்லது கூட்டாளி ஒருவர் இறக்கும் போது
   - iv) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைக்கும் போது

## குறுகிய வினாக்கள்

1. **நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.**

   1) <u>நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன்</u>
      - ❖ நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன், நற்பெயரின் மதிப்பினைத் தீர்மானிக்கிறது.
      - ❖ அதிக இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் அல்லது எதிர்காலத்தில் அதிக இலாபம் ஈட்டும் திறனைக் கொண்டுள்ள ஒரு நிறுவனம், அதிகமான நற்பெயர் மதிப்பினைக் கொண்டிருக்கும்.

   2) <u>வியாபார நிறுவனத்தின் சாதகமான அமைவிடம்</u>
      - ❖ வியாபார நிறுவனமானது, வாடிக்கையாளர்களால் எளிதில் சென்றடையக் கூடிய முக்கிய இடத்தில் அமைந்திருந்தால், அது அதிக வாடிக்கையாளர்களைக் கவரும்.

   3) <u>நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல்</u>
      - ❖ நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதால், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று, நிறுவனத்தின் நற்பெயர் அதிகரிக்கும்.

   4) <u>வியாபார நிறுவனத்தின் கால அளவு</u>
      - ❖ நீண்ட ஆண்டுகள் வணிகத்தை நடத்தி வரும் நிறுவனத்தை, வாடிக்கையாளர் நன்கு அறிந்திருப்பதால், அந்தநிறுவனம் அதிக நன்மதிப்பைக் கொண்டிருக்கும்.
      - ❖ அந்நிறுவனத்தை புதிய நிறுவனத்துடன் ஒப்பீடு செய்யும்போது, அதிக வருமானம் மற்றும் அதிக மதிப்பிலான நற்பெயரைப் பெற்றிருக்கும்.

5) **<u>திறமைமிகு மேலாண்மை</u>**

- திறமையான மேலாண்மைத் திறன் கொண்டிருக்கும் நிறுவனம், திறமை குறைந்த மேலாண்மைத் திறன் கொண்டுள்ள நிறுவனத்தோடு ஒப்பிடுகையில், அதிகமான இலாபம் ஈட்டும் மற்றும் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

6) **<u>போட்டியின் அளவு</u>**

- போட்டியே இல்லாத அல்லது குறைவான போட்டியைக் கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு அதிகமானதாக இருக்கும்.

7) **<u>பிற காரணிகள்</u>**

- உரிமையாளரின் பிரபலம், ஈர்க்கக்கூடிய விளம்பரம், வாடிக்கையாளரிடம் நெருங்கிய தொடர்பு போன்ற பிற காரணிகளும், தொழிலின் நற்பெயரின் மதிப்பை உயர்த்தக் கூடியதாகும்.

---

## 2. உயர் இலாப முறையில் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

- நற்பெயரின் மதிப்பைக் கண்டறிய, உயர் இலாபம் அடிப்படையாக உள்ளது. ஒரு வியாபாரத்தின் உயர் இலாபம் என்பது சாதாரண இலாபத்தைவிட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் ஆகும்.

**உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்**

- சராசரி இலாபம், குறிப்பிட்ட ஆண்டுகளின் சரிக்கட்டப்பட்ட ஈட்டிய இலாபங்கள் கூட்டப்பட்டு, மொத்த ஆண்டுகளின் எண்ணிக்கையால் வகுக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுகிறது.
- சாதாரண இலாபம் என்பது, ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் வழக்கமாக ஈட்டும் இலாபம் ஆகும்.

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்டமுதல் × சாதாரண இலாப விகிதம்

பயன்படுத்தப்பட்டமுதல் = நிலைச் சொத்துகள் + நடப்புச் சொத்துகள் - நடப்புப் பொறுப்புகள்

சாதாரண இலாபவிகிதம் = ஒரு தொழிலில் ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாபவிகிதம்

---

## 3. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

- இம்முறையில் நற்பெயர் என்பது, வியாபாரத்தின் பயன்படுத்தப்பட்ட முதலைவிட, கூடுதலாக உள்ள மூலதனமாக்கப்பட்ட சராசரி இலாபம் ஆகும்.

நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு - பயன்படுத்தப்பட்டமுதல்

- சராசரி இலாபத்தை, சாதாரண இலாபவிகிதத்தின் அடிப்படையில் மூலதனமாக்குதல் மூலம், வியாபாரத்தின் மொத்தமூலதன மதிப்பை கணக்கிடலாம்.

$$\text{வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு} = \frac{\text{சராசரி இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$$

4. **பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.**

2016: ₹. 8,000 ; 2017: ₹. 10,000; 2018: ₹. 9,000

**விடை:**

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{மொத்த ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{8{,}000+10{,}000+9{,}000}{3} = \frac{27{,}0000}{3} = ₹.\ 9{,}000$$

5. **சராசரி இலாபம் ₹. 15,000 ஆக இருக்கும்போது 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.**

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= ₹. 15,000 x 2

= ₹. 30,000

# அலகு 5. கூட்டாளி சேர்ப்பு

**சரியான விடையைத் தேர்வு செய்யவும்**

1. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு ----------

அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாரா க/கு

2. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது --------

அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றுள் எதுவுமில்லை

3. சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்யும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் யாருடைய முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?

அ) பழைய கூட்டாளிகள் ஆ) புதிய கூட்டாளி

இ) அனைத்து கூட்டாளிகள் ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

4. கூட்டாளியின் புதிய இலாபப் பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது

அ) முதல் விகிதம் ஆ) தியாக விகிதம் இ) ஆதாய விகிதம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

5. கூட்டாளி சேர்ப்பின்போது நற்பெயரானது மதிப்பீடு செய்யப்பட்டு யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும்?

அ) அனைத்து கூட்டாளிகள் ஆ) பழைய கூட்டாளிகள்

இ) புதிய கூட்டாளி ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

6. கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?

அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்

ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்

ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது

7. பட்டியல் I ஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (i) தியாகவிகிதம் | 1. முதலீட்டு மாறுபடும்நிதி |
| (ii) பழைய இலாபப் பகிர்வு விகிதம் | 2. பகிர்ந்துதராஇலாபம் |
| (iii) மறுமதிப்பீட்டு கணக்கு | 3. நற்பெயர் |
| (iv) முதல் கணக்கு | 4. பதிவுறா பொறுப்பு |

குறியீடுகள்:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 1 | 4 | 2 |

8. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்

அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்

இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

9. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாகவிகிதத்தை கணக்கிடவும்.

அ) 1:3 ஆ) 3:1 இ) 5:3 ஈ) 3:5

10. பாலாஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள் இலாபநட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி, கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாப் பகிர்வு விகிதம் 3:1:1. பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

அ) 1:3 ஆ) 3:1 இ) 2:1 ஈ) 1:2

**<u>விடைகள்</u>**

1. ஆ 2. அ 3. அ 4. ஆ 5. ஈ 6. ஈ 7. ஆ 8. இ 9. இ 10. ஈ

## <u>மிகக் குறுகிய வினாக்கள்</u>

### 1. சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல் என்றால் என்ன?

- ❖ சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் நடப்பு மதிப்பை தீர்மானிப்பது மறுமதிப்பீடு எனப்படுகிறது.
- ❖ கூட்டாண்மையில் கூட்டாளி ஒருவரை சேர்க்கும் போது, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் ஏட்டு மதிப்பும், நடப்பு மதிப்பும் மாறுபடலாம். எனவே, அவை மறுமதிப்பீடு செய்யப்படுகிறது.

### 2. புதிய கூட்டாளி சேர்க்கையின் போது, பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் எவ்வாறு கூட்டாளிகளிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது?

- ❖ கடந்த ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் இருந்தால், அது பகிர்ந்து தரா இலாபம்எனப்படும்.
- ❖ அவ்வாறான பகிர்ந்துதரா காப்புகள், இலாபங்கள் அல்லது நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு உரியன.

❖ எனவே, அவை பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாபவிகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

3. **தியாக விகிதம் என்றால் என்ன?**

❖ தியாக விகிதம் என்பது, பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்தை, புதிய கூட்டாளிக்கு ஆதரவாக தியாகம் செய்வது அல்லது விட்டுக் கொடுப்பது ஆகும்.

4. **புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது, ஏற்கனவே உள்ள நற்பெயரை பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.**

**<u>குறிப்பேட்டுப் பதிவு</u>**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு ப<br>நற்பெயர் க/கு<br>( பழைய நற்பெயர் போக்கெழுதியது ) | | XXX | XXX |

5. **பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.**

(அ) **சொத்தின் மீதான தேய்மானம்** - பற்று வைக்கப்படும்

(ஆ) **பதிவுறா பொறுப்புகள்** - பற்று வைக்கப்படும்

(இ) **கொடுபடவேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு** - பற்று வைக்கப்படும்

(ஈ) **சொத்தின் மீதான மதிப்பேற்றம்** - வரவு வைக்கப்படும்

## <u>குறுகிய வினாக்கள்</u>

1. **கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ளவேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?**
   1) பகிர்ந்து தரா இலாபம், காப்பு மற்றும் நட்டம் ஆகியவற்றை பகிர்ந்தளித்தல்
   2) சொத்துகளையும், பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
   3) புதிய இலாபவிகிதம் மற்றும் தியாக விகிதத்தை நிர்ணயித்தல்
   4) நற்பெயர் சரிக்கட்டுதல்
   5) முதல் கணக்கை, புதிய இலாப விகிதத்தின் அடிப்படையில் சரிக்கட்டுதல் (ஒப்புக் கொண்டால்)

2. **சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் யாவை?**

## குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | 1. <u>சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போது</u><br>குறிப்பிட்ட சொத்து க/கு ப<br>மறுமதிப்பீட்டு க/கு | | XXX | XXX |
| | 2. <u>சொத்துகளின் மதிப்பு குறையும் போது</u><br>மறுமதிப்பீட்டு க/கு ப<br>குறிப்பிட்ட சொத்து க/கு | | XXX | XXX |
| | 3. <u>பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போது</u><br>மறுமதிப்பீட்டு க/கு ப<br>குறிப்பிட்ட பொறுப்பு க/கு | | XXX | XXX |
| | 4. <u>பொறுப்புகளின் மதிப்பு குறையும் போது</u><br>குறிப்பிட்ட பொறுப்பு க/கு ப<br>மறுமதிப்பீட்டு க/கு | | XXX | XXX |
| | 5. <u>ஏட்டில் பதிவு செய்யாத சொத்துகளை பதிவு செய்யும் போது</u><br>குறிப்பிட்ட சொத்து க/கு ப<br>மறுமதிப்பீட்டு க/கு | | XXX | XXX |
| | 6. <u>ஏட்டில் பதிவு செய்யாத பொறுப்புகளை பதிவு செய்யும் போது</u><br>மறுமதிப்பீட்டு க/கு ப<br>குறிப்பிட்ட பொறுப்பு க/கு | | XXX | XXX |
| | 7. <u>மறுமதிப்பீட்டு கணக்கின் இருப்பினை மாற்ற</u><br>அ) <u>மறுமதிப்பீட்டு இலாபமாக இருந்தால்</u><br>மறுமதிப்பீட்டு க/கு ப<br>பழைய கூட்டாளிகளின் முதல் க/கு<br>( பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக )<br>ஆ) <u>மறுமதிப்பீட்டு நட்டமாக இருந்தால்</u><br>பழைய கூட்டாளிகளின் முதல் க/கு ப<br>( பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக )<br>மறுமதிப்பீட்டு க/கு | | XXX<br><br>XXX | XXX<br><br>XXX |

3. **நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறை குறித்து சிறு குறிப்பு தரவும்.**

1) புதிய கூட்டாளி நற்பெயருக்காக ரொக்கம் அல்லது சொத்து கொண்டு வரும் போது
2) புதிய கூட்டாளி நற்பெயருக்கென ரொக்கம் அல்லது சொத்து ஏதும் கொண்டு வராத போது
3) புதிய கூட்டாளி நற்பெயருக்கான ஒரு பகுதியை மட்டும் ரொக்கம் அல்லது சொத்துகளாக கொண்டு வரும் போது.
4) பழைய நற்பெயர்

1) **புதிய கூட்டாளி நற்பெயருக்காக ரொக்கம் அல்லது சொத்து கொண்டு வரும் போது**

- புதிய கூட்டாளி முதல் தொகையோடு, கூடுதலாக நற்பெயருக்காகவும் பணம் கொண்டுவரும் போது, அது பழைய கூட்டாளிகளின் தியாக விகிதத்தின் படி அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

2) **புதிய கூட்டாளி நற்பெயருக்கென ரொக்கம் அல்லது சொத்து ஏதும் கொண்டு வராத போது**

- புதிய கூட்டாளி நற்பெயருக்காக பணம் அல்லது சொத்துகள் ஏதும் கொண்டு வராத போது, அவருடைய நற்பெயருக்கான பங்கினை கூட்டாளிகளின் முதல் கணக்கில் சரிக்கட்டவேண்டும்.

3) **புதிய கூட்டாளி நற்பெயருக்கான ஒரு பகுதியை மட்டும் ரொக்கம் அல்லது சொத்துகளாக கொண்டு வரும் போது.**

- சில நேரங்களில் புதிய கூட்டாளி நற்பெயருக்கென ஒரு பகுதியை மட்டும் ரொக்கம் அல்லது சொத்துகளாகக் கொண்டு வருவதுண்டு.
- அந்நிலைகளில், ரொக்கம் அல்லது சொத்துகள் குறிப்பிட்ட கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.
- கொண்டு வராத தொகை புதிய கூட்டாளியின் முதல் கணக்கில் பற்று செய்யப்படுகிறது.
- இத்தொகையானது பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

4) **பழைய நற்பெயர்**

- நற்பெயர் ஏற்கனவே கணக்கேடுகளில் இருந்தால், கூட்டாளி சேர்க்கையின் போது கூட்டாளிகள் முடிவெடுத்தால், அதனை போக்கெழுத, பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் அல்லது நடப்புக் கணக்கில் பழைய இலாப விகிதத்தில் மாற்றிட வேண்டும்.

# அலகு 6. கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு

## சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. கூட்டாளி ஒருவர் ஜுன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது

அ) நடப்பு கணக்காண்டின் இறுதி வரைக்கும்

ஆ) முந்தையகணக்காண்டின் இறுதி வரைக்கும்

இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்

ஈ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும்

2. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.

அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்

இ) ஆதாய விகிதம் ஈ) தியாக விகிதம்

3. கூட்டாளி விலகலின் போது பொதுக்காப்பு மாற்றப்படுவது ----------

அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

ஆ) மறுமதிப்பீட்டுக்கணக்கிற்கு

இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

ஈ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

4. மறுமதிப்பீட்டின்போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது -------------

அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

5. ஒரு கூட்டாளி விலகலின்போது, ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?

அ) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு

ஆ) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளிப்பதற்கு

இ) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு

ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத் தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு ------------

அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு

இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிறகூட்டாளிகளின் முதல் க/கு

7. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த 'A' என்பவர் 2019, மார்ச்31 அன்று இறந்து விட்டார். அவருக்கு செலுத்த வேண்டிய இறுதித்தொகை ₹. 25,000 உடனடியாகச் செலுத்தப்படவில்லை. அது மாற்றப்பட வேண்டிய கணக்கு ---------

அ) A- ன் முதல் கணக்கு ஆ) A- ன் கடன் கணக்கு

இ) A - ன் நிறைவேற்றாளர் கணக்கு ஈ) A-ன் நிறைவேற்றாளர் கடன் கணக்கு

8. A, B மற்றும் C என்றகூட்டாளிகள் 2:2:1 என்றவிகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். B- ன் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் ₹. 30,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி B-க்கு ஈடு செய்வதற்கு A மற்றும் C யின் பங்களிப்பைக் கண்டறியவும்.

அ) ₹. 20,000 மற்றும் ₹. 10,000 ஆ) ₹. 8,000 மற்றும் ₹. 4,000

இ) ₹. 10,000 மற்றும் ₹. 20,000 ஈ) ₹. 15,000 மற்றும் ₹. 15,000

9. A, B மற்றும் C என்றகூட்டாளிகள் 4:2:3 என்றவிகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்

அ) 4:3 ஆ) 3:4 இ) 2:1 ஈ) 1:2

10. X, Y மற்றும் Z என்றகூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2019, ஏப்ரல் 1 அன்று X இறந்து விட்டார். 2018 இல் இலாபம் ₹. 36,000 என்றஅடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X ன் பங்கினைக் கண்டறியவும்.

அ) ₹. 1, 000 ஆ) ₹. 3,000 இ) ₹. 12,000 ஈ) ₹. 36,000

## விடைகள்

1. இ 2. ஆ 3. அ 4. ஆ 5. இ 6. இ 7. ஈ 8. ஆ 9. இ 10. ஆ

## மிகக்குறுகிய வினாக்கள்

**1. கூட்டாளி விலகல் என்றால் என்ன?**

- ஒரு கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து, கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால், அது கூட்டாளி விலகல் எனப்படும்.

**2. ஆதாய விகிதம் என்றால் என்ன?**

- ஆதாய விகிதம் என்பது, தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப் பெற்ற இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும்.

**3. ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் என்ன?**

- ஆதாயவிகிதம் கணக்கிடுவதின் நோக்கம் விலகும் கூட்டாளிக்கு கொடுக்கப்படும் நற்பெயரை ஏற்றுக் கொள்வதாகும்.
- ஆதாயப்பங்கு பின்வருமாறு கணக்கிடப்படுகிறது

ஆதாயப் பங்கு = புதியபங்கு - பழையபங்கு

ஆதாய விகிதம் = தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப் பெற்ற ஆதாயத்தின் விகிதமாகும்

**4. இறந்த கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளர் கணக்கிற்கு மாற்றுவதற்குரிய குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | இறந்த கூட்டாளிகள் முதல் க/கு ப<br>இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு | | XXX | <br>XXX |

## குறுகிய வினாக்கள்

**1. கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.**

1) பகிர்ந்து தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்தளித்தல்
2) சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
3) புதியவிகிதம் மற்றும் தியாகவிகிதம் ஆகியவற்றைத் தீர்மானித்தல்
4) நற்பெயர் சரிக்கட்டுதல்
5) கூட்டாளி விலகும் நாள் வரை உள்ள நடப்பு ஆண்டு இலாபம் அல்லது நட்டத்தை சரிக்கட்டுதல்
6) விலகும் கூட்டாளிக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்துதல்

2. **தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| அடிப்படை | தியாக விகிதம் | ஆதாய விகிதம் |
|---|---|---|
| 1. பொருள் | புதிய கூட்டாளிக்கு, பழைய கூட்டாளிகள், தியாகம் செய்து கொடுக்கும் இலாபப் பங்கின் விகிதாச்சாரம் ஆகும். | தொடரும் கூட்டாளிகள், விலகும் கூட்டாளியிடம் இருந்து பெறும் ஆதாயப் பங்கின் விகிதாச்சாரம் ஆகும். |
| 2. நோக்கம் | இது, தியாகம் செய்யும் கூட்டாளிகளுக்கு, நற்பெயர் தொகையைச் சரிக்கட்டிக் கொள்வதை தீர்மானிப்பதற்காகக் கணக்கிடப்படுகிறது. | இது, ஆதாயம் பெறும் கூட்டாளிகளுக்கு, நற்பெயர் தொகையைச் சரிக்கட்டிக் கொள்வதை தீர்மானிப்பதற்காகக் கணக்கிடப்படுகிறது. |
| 3. கணக்கிடும் காலம் | புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது | கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது. |
| 4.கணக்கிடும் முறை | பழைய இலாப விகிதத்திற்கும் மற்றும் புதிய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் - புதிய இலாப விகிதம் | புதிய இலாப விகிதத்திற்கும் மற்றும் பழைய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் - பழைய இலாப விகிதம் |

3. **வெளிச்செல்லும் கூட்டாளிக்குச் செலுத்தவேண்டிய தொகையினை எவ்வாறு தீர்வு செய்யலாம்?**

- கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி ஒருவர் விலகும்போது, நற்பெயர், பகிர்ந்து தரா இலாபம் அல்லது நட்டம், மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம், கூட்டாளியின் ஊதியம் ஆகியவற்றை சரிக்கட்டிய பிறகு கிடைக்கக்கூடிய முதல் கணக்கின் இருப்பு, அக்கூட்டாளிக்கு செலுத்தப்பட வேண்டும்.
- கூட்டாண்மை ஒப்பாவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அவருக்கு சேர வேண்டிய தொகையைத் தீர்வுச் செய்ய வேண்டும்.
- பின்வரும் வழிகளில் விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகை தீர்க்கப்படலாம்.

i) அவருக்கு சேரவேண்டிய முழுத்தொகையையும் ரொக்கமாக உடனடியாக செலுத்தலாம்.
ii) மொத்தத் தொகையையும் கூட்டாளியின் கடன் கணக்கிற்கு மாற்றி விடலாம்.
iii) பாதித் தொகையை உடனடியாக ரொக்கமாகவும் மீதித் தொகையை கடன் கணக்கிற்கு மாற்றி விடலாம்.

# அலகு 7. நிறுமக் கணக்குகள்

## சரியானவிடையைத் தேர்வு செய்யவும்

1. முன்னுரிமைப்பங்கு என்பது ------------

(i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கான முன்னுரிமையைப்பெற்றபங்கு
(ii) கலைப்பின்போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப்பெற்ற பங்கு

அ) (i) மட்டும் சரியானது ஆ) (ii) மட்டும் சரியானது
இ) (i) மற்றும் (ii) சரியானது ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

2. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.

அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்

இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்

3. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?

அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு

இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை

4. ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை மறுவெளியீடு செய்தபிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது

அ) பொதுக்காப்பு கணக்கிற்கு ஆ) முதலினக் காப்பு கணக்கிற்கு

இ) பத்திர முனைமக் கணக்கிற்கு ஈ) உபரி கணக்கிற்கு

5. முகமதிப்பைவிட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு

இ) பங்குமுதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

6. பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?

அ) வெளியிடப்பட்ட பங்கு முதல் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலைவிட, ஒருபோதும் அதிகமாக இருக்கக் கூடாது.

ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில், வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்கு முதலைவிட குறைவாக இருக்கும்.

இ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.

ஈ) செலுத்தப்பட்ட பங்கு முதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.

7. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு ----------

அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துகள் க/கு

இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு

8. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்

(A) குறைஒப்பம் - (i) முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம்

(B) மிகைஒப்பம் - (ii) வெளியிட்ட பங்குகளைவிடஅதிகமாகஒப்பப்பட்டது

(C) அழைப்பு நிலுவை - (iii) வெளியிட்ட பங்குகளைவிடகுறைவாகஒப்பப்பட்டது

(D) அழைப்பு முன்பணம் - (iv) செலுத்தப்பெறாத அழைப்பு பணம்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ) | (iv) | (iii) | (ii) | (i) |
| இ) | (iii) | (ii) | (iv) | (i) |
| ஈ) | (iii) | (iv) | (i) | (ii) |

9. ₹. 8 செலுத்தப்பட்ட, ₹. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை -------------

அ) பங்கொன்று ₹. 10 ஆ) பங்கொன்று ₹. 8 இ) பங்கொன்று ₹. 5 (ஈ) பங்கொன்று ₹. 2

10. சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ₹.10 மதிப்புடைய 100 பங்குகளைஇறுதி அழைப்புத்தொகை ₹. 2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ₹. 9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலினக் காப்புக்கு மாற்றப்படவேண்டிய தொகை ----------

அ) ₹. 700 ஆ) ₹. 800 இ) ₹. 900 ஈ) ₹. 1,000

## விடைகள்

1. இ 2. ஈ 3. ஈ 4. ஆ 5. அ 6. ஆ 7. இ 8. இ 9. ஈ 10. அ

## மிகக் குறுகிய வினாக்கள்

1. **பங்கு என்றால் என்ன?**
   - ஒரு நிறுமத்தின் முதல், குறிப்பிட்ட பண மதிப்பிலான சிறிய அலகுகளாகப் பிரிக்கப்படுவதையே 'பங்குகள்' என அழைக்கப்படுகின்றன.

2. **மிகை ஒப்பம் என்றால் என்ன?**
   - வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட, விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.

3. **அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன?**
   - பங்குதாரர் ஒருவர் தான் செலுத்த வேண்டிய ஒதுக்கீட்டுத் தொகை அல்லது அழைப்புத் தொகையை செலுத்தத் தவறினால், இன்னமும் செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும்.
   - அதாவது அழைக்கப்பட்டும், செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும்.

4. **பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.**
   - ஒரு நிறுமம், தனது முகமதிப்பில் உள்ள பங்கின் மதிப்பினை, அதிகரித்து வெளியிடுவது பங்கு முனைமம் ஆகும்.
   - மிகுதியான தொகை முனைமம் என்று அழைக்கப்படுகின்றது

5. **பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?**
   - பங்குதாரர் ஒருவர், ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

## குறுகிய வினாக்கள்

1. **முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.**

| வ.எண் | முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|---|
| 1 | பிறவகையான பங்குகள் பெற்றிருக்கும் உரிமைகளை விட, சிலவற்றில் முன்னுரிமைப் பெற்றிருக்கும் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் எனப்படுகின்றன. | முன்னுரிமைப்பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மைப்பங்குகள் ஆகும் |
| 2 | நிறுமத்தின் வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்காதாயம், இதில் பெறமுடியும். | இதில், பங்காதாயம் நிலையாக இருப்பதில்லை |
| 3 | நிறும கலைப்பின் போது, பங்குதாரர்களுக்கு முதலை திரும்ப செலுத்த வேண்டும் | நிறும கலைப்பின் போது, முன்னுரிமை பங்குதாரர்களுக்கு, முதலை திரும்ப செலுத்திய பிறகே, நேர்மை பங்குதாரார்களுக்கு செலுத்தப்படும். |

**2. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்.**

- பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பைவிட, அதிகமாகப் பெறப்பட்ட தொகை, அழைப்பு முன்பணம் எனப்படும்.
- இது பங்கு விண்ணப்பம் அல்லது பங்கு ஒதுக்கீடு அல்லது பங்கு அழைப்புக் கணக்கில் அதிகமாக பெறப்பட்ட தொகையாகும்.
- அவ்வாறு அதிகமாகப் பெறப்பட்ட தொகையை, திருப்பி அளிக்க வேண்டும் அல்லது எதிர்காலத்தில் செலுத்தவேண்டிய தொகைகளில் சரிக்கட்ட வேண்டும்.
- அவ்வாறு எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய தொகைகளில் சரிக்கட்ட தீர்மானித்தால், அந்த அதிகமாகப் பெறப்பட்ட தொகையை, அழைப்பு முன்பணம் என்ற தனிக் கணக்கிற்கு மாற்றலாம்.
- அழைப்பு முன்பணம், நிறுமத்தின் பங்கு முதலில் ஒரு பகுதி அல்ல மற்றும் அதற்கு பங்காதாயம் ஏதும் செலுத்த வேண்டியது இல்லை.
- இது இருப்புநிலைக் குறிப்பில், இதர நடப்புப் பொறுப்புகளின் கீழ்காட்டப்படும்.
- இந்திய நிறுமச் சட்டம், 2013 அட்டவணை F- ன் படி, நிறுமச் செயல்முறை விதிகளில் கூறி உள்ளவாறு, அழைப்பு முன்பணத்திற்கு வட்டியாக ஆண்டுக்கு 12% மிகாமல் செலுத்தப்பட வேண்டும்.

---

**3. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?**

- ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், நிறுமத்தால் மறுவெளியீடு செய்யப்படலாம்.
- அப்பங்குகள், எந்தவிலையிலும் மறுவெளியீடு செய்யலாம்.
- ஆனால், வெளியீட்டு விலை, ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்கக் கூடாது.

---

**4. சிறுகுறிப்பு வரைக.**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்**

**(ஆ) காப்பு முதல்**

(அ) <u>அங்கீகரிக்கப்பட்ட முதல்</u>

- இது அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும்.
- இது அதிகப்பட்சமாக முதலாக திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை.
- இதனைப் ' பதிவு செய்யப்பட்ட முதல் ' அல்லது ' பெயரளவு முதல் ' என்றும் கூறலாம்.

(ஆ) <u>காப்பு முதல்</u>

- ஒரு நிறுமம் அதன் கலைப்பின்போது மட்டும், அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள, அழைக்கப்பட்ட முதலின் ஒரு பகுதியினை 'காப்பு முதல்' என்று அழைக்கலாம்.

---

**5. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?**

- நிறுமம், நிலம் மற்றும் கட்டடம், இயந்திரம் போன்ற நிலைச் சொத்துகளை வாங்கும்போது, பங்குகளை ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக வெளியிடுவதையே, ரொக்கம் தவிர, இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு எனப்படுகின்றது.
- மேலும், ஒரு நிறுமம், வணிக நிறுவனத்தை வாங்குவதற்காகவும், தோற்றுவிப்பாளர்களுக்கு அவர்களின் பணிக்காகவும், தரகர் மற்றும் ஒப்புறுதியாளர்களுக்கு கழிவு கொடுப்பதற்காகவும் ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடலாம்.

# அலகு 8. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

## சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானதல்ல?
   அ) குறிப்புகள் மற்றும் பட்டியல்களும் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகின்றன.
   ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளில் பொது அளவு அறிக்கை உள்ளடங்கும்.
   இ) போக்குப் பகுப்பாய்வு என்பது, ஓராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.
   ஈ) பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். இவ்வினங்கள், பொது அளவு அடிப்படையின் சதவிகிதமாக காட்டப்படுகின்றன.

2. இருப்புநிலைக்குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய --------- தகவல்களை வழங்குகிறது.
   அ) ஒரு காலக்கட்டத்திற்கு மேலான ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
   இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய

3. நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வின் பின்வரும் எந்த கருவி பல்வேறு ஆண்டுகளுக்கான விவரங்களை பகுப்பாய்வு செய்வதற்கு ஏற்புடையதாகும்?
   அ) ரொக்க ஓட்ட பகுப்பாய்வு ஆ) பொது அளவு அறிக்கை
   இ) ஒப்பீட்டு அறிக்கை ஈ) போக்கு ஆய்வு

4. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   அ) பணம்சாரா தகவல்கள் ஆ) கடந்தகால தகவல்கள்
   இ) குறுகியகால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்

5. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?
   அ) போக்குப் பகுப்பாய்வு ஆ) பொது அளவு அறிக்கை
   இ) ஒப்பீட்டு அறிக்கை ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையியல்

6. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது ----------------
   அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல்
   இ) நிலைச் சொத்துகள் ஈ) நீண்டகாலச் சொத்துகள்

7. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?
   அ) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும், நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்.
   ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு ஒரு வழிமுறை, இது ஒரு முடிவல்ல.
   இ) நிதி நிலைஅறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை.
   ஈ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துகளை உள்ளடக்கியதாகும்.

8. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹. 1,25,000 லிருந்து ₹. 1,50,000 க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?
   அ) + 20 % ஆ) + 120 % இ) - 120 % ஈ) - 20 %

9. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100

10. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹. 80,000. இரண்டாம் ஆண்டில் செலவுகள் ₹.88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?

அ) 10 % ஆ) 110 % இ) 90 % ஈ) 11%

## விடைகள்

1. இ 2. ஆ 3. ஈ 4. அ 5. ஈ 6. ஆ 7. இ 8. அ 9. இ 10. ஆ

## மிகக் குறுகிய வினாக்கள்

### 1. நிதிநிலை அறிக்கைகள் யாவை?

- ஒரு கணக்காண்டின் இறுதியில் வியாபாரத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதிநிலையை அறிந்து கொள்ள தயாரிக்கப்படும் அறிக்கைகளே, நிதிநிலை அறிக்கைகள் ஆகும்.
- வியாபார நிறுவனங்களால் தயாரிக்கப்படும், வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவை அடிப்படை நிதிநிலை அறிக்கைகளாகும்.

### 2. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.

1) ஒப்பீட்டு அறிக்கை
2) பொது அளவு அறிக்கைகள்
3) போக்குப் பகுப்பாய்வு
4) நிதி ஓட்டப் பகுப்பாய்வு
5) ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு

### 3. நடைமுறை முதல் என்றால் என்ன?

- "நிதி" என்பது நடைமுறை முதலைக் குறிப்பதாகும்.
- நடைமுறை முதல் என்பது, நடப்புப் பொறுப்புகளைவிட அதிகமாக உள்ள நடப்புச் சொத்துகளைக் குறிப்பதாகும்.

### 4. போக்குப் பகுப்பாய்வு எப்போது இதர பகுப்பாய்வு கருவிகளை விட ஏற்புடையதாகும்?

- போக்குப் பகுப்பாய்வு என்பது, ஒரு காலக்கட்டத்திற்கு மேல் உள்ள தொகைகளின் இயக்கத்தை ஆய்வு செய்வதாகும்.
- போக்கு என்பது, வளர்ந்து வரும் போக்காகவோ அல்லது குறைந்து செல்லும் அல்லது முறையற்ற போக்காகவோ இருக்கலாம்.
- இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உள்ள தகவல்களை, பகுப்பாய்வு செய்ய, ஒப்பீட்டு அளவு அறிக்கை முறையை பயன்படுத்துவது கடினமானதாகும்.
- அத்தகைய சூழ்நிலையில், போக்குப் பகுப்பாய்வு பயன்படுத்தப்படலாம்.

## குறுகிய வினாக்கள்

### 1. நிதிநிலைஅறிக்கைகள் கடந்தகால விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படுகின்றன. இது எப்படி ஒரு குறைபாடாகும் என விளக்கவும்.

1) <u>பணம் சாராத தகவல்கள் இல்லாமை</u>:

- பணம் சாரா தகவல்களும், வியாபார முடிவெடுத்தலுக்கு முக்கியமானதாகும். எடுத்துக்காட்டாக, பணியாளர்களின் திறமை, மேலாண்மையின் திறமை போன்றவை.
- ஆனால், இவை நிதிநிலை அறிக்கைகளில் இடம் பெறுவதில்லை.

2) <u>கடந்த கால விவரங்களின் பதிவேடு</u>:

- ❖ நிதிநிலை அறிக்கைகள் கடந்தகால விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.
- ❖ எனவே, அவை நடப்பு நிலைமையை வெளிப்படுத்தாமல் போகலாம்.

3) <u>விலை நிலை மாற்றங்களை பொருட்படுத்துவதில்லை</u>:

- ❖ விலை நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள், நிதிநிலை அறிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை.
- ❖ எனவே, அவை நடப்பு நிலைமையை வெளிப்படுத்தாமல் போகலாம்.

4) <u>நிலைத்தன்மை குறைவு</u>:

- ❖ பல்வேறு நிறுவனங்கள், பல்வேறு கணக்கியல் முறைகளை பின்பற்றுகின்றன.
- ❖ எனவே, இரண்டு தொழிலமைப்புகளை ஒப்பீடு செய்வது கடினமாகும்.

5) <u>இடைக்கால அறிக்கைகளை மட்டுமே தருகிறது</u>:

- ❖ நிதிநிலை அறிக்கைகள் ஒவ்வொரு கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படுகின்றன.
- ❖ ஆனால், வணிகத்தின் உண்மையான நிலவரத்தை, நிறுவனத்தின் கலைப்பின் போது மட்டுமே அறிய இயலும்.
- ❖ எனவே, நிதிநிலை அறிக்கைகள் நிறுவனத்தின் துல்லியமான நிலையினை வெளிக்காட்டாது.

6) <u>புறப் பயனீட்டாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட தகவல்கள்</u>:

- ❖ புறப்பயனீட்டாளர்கள் அணுகல் வரையறுக்கப்பட்டுள்ளதால் அவர்கள், முழுமையான தொடர்ச்சியான நிதிநிலை முடிவுகளைப் பெறமுடியாது.

7) <u>தனிப்பட்ட முடிவுகளினால் பாதிக்கப்படுகிறது</u>:

- ❖ நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பு என்பது, தனிநபரின் முடிவுக்குட்பட்டது.
- ❖ எனவே, இவை ஒருதலை பட்சமானதாக இருக்கலாம்.

---

## 2. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையுவும்.

- ❖ ரொக்க ஓட்ட பகுப்பாய்வு என்பது, ரொக்க ஓட்ட அறிக்கை, தயாரிப்பதைக் குறிக்கும்.
- ❖ இது ஒரு குறிப்பிட்ட காலத்தில், உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகளை வெளிப்படுத்தும்.
- ❖ ரொக்கம் என்பது, கைரொக்கம் மற்றும் வங்கியில் உள்ள கேட்பு வைப்புகளை உள்ளடக்கியது.
- ❖ ரொக்கத்திற்கு சமமானவைகள் என்பது, குறுகிய காலத்தில் அதிக நட்டமில்லாமல் ரொக்கமாக மாற்றக்கூடிய, குறுகிய கால முதலீடுகளைக் குறிக்கும்.
- ❖ ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு வணிக நிறுவனத்தின் நீர்மைத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள் கணக்கிடுவதற்கு உதவிகரமானதாக இருக்கிறது.

---

## 3. நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.

( குறுகிய வினாவில், வினா எண் 1 - ன் பதிலை எழுதவும் )

---

## 4. ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.

பத்தி 1 : இந்தப் பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்

பத்தி 2 : முதல் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

பத்தி 3 : இரண்டாம் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

பத்தி 4 : முதலாண்டு தொகைக்கும், இரண்டாமாண்டு தொகைக்கும் இடையேயான

வேறுபாட்டினைக் காட்டவும். 2- ம் ஆண்டில் மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும், மதிப்பு குறைந்திருந்தால் கழித்தல் அடையாளமும் இடவேண்டும்.

**பத்தி 5 :** 4 - ஆம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள தொகையினை, இரண்டாம் பத்தியில் (முதல் ஆண்டு தொகை) கொடுக்கப்பட்டுள்ள தொகையுடன் வகுத்து (கூடும் அல்லது குறையும் தொகை) 4 - ஆம் பத்தியின் தொகைக்கான கூடும் அல்லது குறையும் சதவீதத்தினைக் காட்டவும்.

$$\text{கூடும் அல்லது குறையும் சதவீதம்} = \frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}} \times 100$$

**ஒப்பு நோக்கு அறிக்கையின் படிவம்**

| விவரம் | ஆண்டு 1 | ஆண்டு 2 | தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) | சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) |
|---|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ | |
| (1) | (2) | (3) | (4) | (5) |

## 5. பொது அளவு வருமான அறிக்கை தயாரிக்கும் வழிமுறைகளை விளக்கவும்.

**பத்தி 1 -** வருமான அறிக்கை அல்லது இருப்புநிலைக் குறிப்பில் உள்ள இனங்களின் விவரங்கள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன.

**பத்தி 2 -** தொகையினைப் பதிவு செய்யவும்.

**பத்தி 3 -** பொதுவான அடிப்படையாக 100 என்பதை எடுத்துக் கொள்ளவும். எடுத்துக்காட்டாக விற்பனை மூலம் பெற்ற வருவாய் என்பது, வருமான அறிக்கைக்கு அடிப்படையாகவும், இருப்புநிலைக் குறிப்பின் மொத்தத் தொகை, இருப்புநிலைக் குறிப்பிற்கு அடிப்படையாகவும் எடுத்துக் கொள்ளப்படலாம். பத்தி 2 - ல் உள்ள விவரங்களுக்கு பொதுவான அடிப்படையை கொண்டு சதவீதம் கணக்கீடு செய்து 3 -ஆம் பத்தியில் பதிவு செய்யவும்.

**பொது அளவு அறிக்கையின் படிவம்**

| விவரம் | தொகை (₹) | சதவீதம் |
|---|---|---|
| | | |

# அலகு 9. விகிதப் பகுப்பாய்வு

## சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது ---------------

   அ) முடிவு ஆ) விகிதம் இ) மாதிரி ஈ) தீர்மானம்

2. நடப்பு விகிதம் காட்டுவது

   அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் ஆ) மேலாண்மை திறன்
   இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்

3. சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துகள் அழைக்கப்படுவது

   அ) காப்புகள் ஆ) புலனாகும் சொத்துகள் இ) நிதி ஈ) விரைவு சொத்துகள்

4. புற அக பொறுப்புகள் அளவிடுவது

   அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் ஆ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்
   இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) செயல் திறன்

5. பட்டியல் ஒன்றை பட்டியல் இரண்டுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| பட்டியல்I | பட்டியல்II |
|---|---|
| (i) நடப்பு விகிதம் | 1. நீர்மைத் தன்மை |
| (ii) நிகர இலாப விகிதம் | 2. செயல்திறன் |
| (iii) புற அக பொறுப்புகள் விகிதம் | 3. நீண்டகால கடன் தீர்க்கும் திறன் |
| (iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | 4. இலாபத்தன்மை |

குறியீடுகள்:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

6. ஒரு நிறுமத்தின் நீர்மைத் தன்மையை சோதிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள் பயன்படுகிறது?

   (i) விரைவு விகிதம் (ii) நிகர இலாப விகிதம்
   (iii) புற அக பொறுப்புகள் விகிதம் (iv) நடப்பு விகிதம்

   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

   அ) (i) மற்றும் (ii) ஆ) (i) மற்றும் (iv) இ) (ii) மற்றும் (iii) ஈ) (ii) மற்றும் (iv)

7. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம்

   அ) உரிமையாளர் விகிதம் ஆ) முதல் உந்துதிறன் விகிதம்
   இ) புற அக பொறுப்பு விகிதம் ஈ) நடப்பு விகிதம்

8. பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?

   அ) நீர்மைவிகிதம் - விகிதாச்சாரம்
   ஆ) மொத்த இலாப விகிதம் - சதவீதம்
   இ) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் - சதவீதம்
   ஈ) புற அக பொறுப்புகள் விகிதம் - விகிதாச்சாரம்

9. நடப்புப் பொறுப்பு ₹. 40,000 ; நடப்புச் சொத்து ₹. 1,00,000 ; சரக்கிருப்பு ₹. 20,000 எனில் விரைவு விகிதம்

அ) 1:1 ஆ) 2.5:1 இ) 2:1 ஈ) 1:2

10. விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை ₹. 3,00,000; அவ்வாண்டின் தொடக்கச் சரக்கிருப்பு ₹. 60,000; அவ்வாண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹. 40,000 எனில் சரக்கிருப்பு சுழற்சி விகிதம்

அ) 2 மடங்கு ஆ) 3 மடங்கு இ) 6 மடங்கு ஈ) 8 மடங்கு

**விடைகள்**

1. ஆ 2. அ 3. ஈ 4. ஆ 5. அ 6. ஆ 7. அ 8. இ 9. இ 10. இ

## மிகக் குறுகிய வினாக்கள்

### 1. கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?

- விகிதம் என்பது, இரண்டு தொடர்புடைய அல்லது ஒன்றை ஒன்று சார்ந்த இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பைக் கணிதவியல் அடிப்படையில் வெளிப்படுத்துவது ஆகும்.
- இது, இரு இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பினை, எண்ணியல் அல்லது எண்ணிக்கையில் குறிக்கும்.
- இது ஒரு இனத்தை, அது தொடர்பான மற்றொரு இனத்தால், வகுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.
- விகிதங்கள், கணக்கியல் தகவல்களின் அடிப்படையில் கணக்கிடப்படும் போது, அவை கணக்கியல் விகிதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

### 2. விரைவு விகிதம் என்றால்என்ன?

- விரைவு விகிதம், நீர்மைச் சொத்துகளுக்கும், நடப்புப் பொறுப்புகளுக்கும் உள்ள விகிதாச்சாரம் ஆகும்.

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{நீர்மைச் சொத்துகள்}}{\text{நடப்பு பொறுப்புகள்}}$$

- நீர்மைச் சொத்துகள் = நடப்புச் சொத்துகள் - சரக்கிருப்பு - முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்

### 3. புற அக பொறுப்பு விகிதம் என்றால் என்ன?

- புற அக பொறுப்புகள் விகிதம், ஒரு வணிக நிறுவனத்தின் நீண்டகால கடன் தீர்க்கும் திறனை மதிப்பிடுவதற்கு கணக்கிடப்படுகிறது.
- புற அக பொறுப்புகள் விகிதம் நீண்டகால கடன் மற்றும் பங்குதாரர் நிதிக்கும் உள்ள தொடர்பினை வெளிப்படுத்துகிறது.

$$\text{புற அக பொறுப்புகள் விகிதம்} = \frac{\text{நீண்டகால கடன்}}{\text{பங்குநர் நிதி}}$$

4. **முதலீடுகள் மீதான வருவாய் விகிதம் எதைக் குறிப்பிடுகிறது?**
- ❖ முதலீடு மீதான வருவாய், வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபத்திற்கும், பயன்படுத்தப்பட்ட முதலுக்கும் உள்ள விகிதத்தைக் காட்டுகிறது (பங்குதாரர் நிதி மற்றும் நீண்டகாலக் கடன்கள்).
- ❖ இந்த விகிதமானது பயன்படுத்தப்பட்ட முதல், வணிகத்தில் எவ்வாறு திறமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அளவிடுகிறது.
- ❖ இது வணிக நிறுவனத்தின் ஒட்டு மொத்த இலாபத் தன்மையை அளவிடுகிறது.

$$\text{முதலீடு மீதான வருவாய்} = \frac{\text{வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{பயன்படுத்தப்பட்ட முதல்}} \times 100$$

5. **விகித பகுப்பாய்வின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைத் தரவும்.**

1) <u>விகிதங்கள் வழிமுறைகளை மட்டும் தருகின்றன</u>:
- ❖ விகிதங்களே முடிவல்ல. ஆனால், ஒரு குறிப்பிட்ட நோக்கத்தினை அடைவதற்கான வழிமுறைகளை மட்டும் அவை தருகின்றன.

2) <u>நிதித் தகவல்களின் துல்லியத் தன்மை</u>:
- ❖ விகிதங்களின் துல்லியத் தன்மை நிதிநிலை அறிக்கைகளிலிருந்து எடுக்கப்படும், நிதித் தகவல்களின் துல்லியத் தன்மையைப் பொறுத்து அமைகிறது.
- ❖ நிதிநிலைஅறிக்கைகள், துல்லியமற்றதாக இருந்தால், அதனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் விகிதங்களும் துல்லியம் அற்றதாகி விடுகின்றன.

3) <u>நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதில் நிலைத் தன்மை:</u>
- ❖ நிறுவனங்கள் ஒருமித்த கணக்கியல் நடைமுறைகளை நிலையாகப் பின்பற்றும் போது மட்டும்தான், விகிதப் பகுப்பாய்வின் உதவியுடன், நிறுவனத்திற்குள் ஒப்பீடு செய்வது அர்த்தமுடையதாகிறது.

4) <u>விலை நிலையில் ஏற்படும் மாற்றம்:</u>
- ❖ நிதிநிலை அறிக்கைகளில் தரப்பட்டுள்ள புராதன தகவல்களின் அடிப்படையில், விகிதப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுவதால், விலை நிலையில் ஏற்படும் மாற்றம் மற்றும் தற்போதைய மதிப்பை இது பிரதிபலிப்பதில்லை.

## <u>குறுகிய வினாக்கள்</u>

1. **விகித பகுப்பாய்வின் நோக்கங்களை விளக்கவும்.**
   - i) கணக்கியல் தொகைகளை சுருக்கமாகக் கூற
   - ii) நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வு செய்வதற்கு வழிவகை செய்ய
   - iii) தொழில் நிறுவனத்தின் இயக்க செயல் திறனை பகுப்பாய்வு செய்ய
   - iv) திட்டமிடுதல் மற்றும் முன்கணித்தலுக்கு உதவ
   - v) நிறுவனத்திற்குள்ளேயும் மற்றும் நிறுவனங்களுக்கிடையேயும் செயல்பாடுகளை ஒப்பிட்டுப் பார்க்க

2. **சரக்கிருப்பு மாற்று காலம் என்றால் என்ன? இது எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**
- ❖ சரக்கிருப்பு மாற்று காலம் என்பது, சரக்கிருப்பை விற்பனை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் ஆகும்.
- ❖ குறுகிய சரக்கிருப்பு மாற்று காலம், சரக்கிருப்பு மேலாண்மையின் அதிக செயல்திறனை குறிப்பிடுகிறது.
- ❖ இது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

| | | |
|---|---|---|
| சரக்கிருப்பு மாற்று காலம் ( நாட்களில் ) | = | $\frac{\text{ஒரு ஆண்டிலுள்ள நாட்கள்}}{\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்}}$ |
| சரக்கிருப்பு மாற்று காலம் ( மாதங்களில் ) | = | $\frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்}}$ |

### 3. இயக்க இலாபம் எவ்வாறு கண்டறியப்படுகிறது?

- இயக்க இலாப விகிதம், இயக்க இலாபத்திற்கும், விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கும் உள்ள விகிதத்தை தருகிறது.
- இயக்க இலாப விகிதம், வணிக நிறுவனத்தின் செயல்திறனைக் காட்டுகிறது.
- இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{இயக்க இலாப விகிதம்} = \frac{\text{இயக்க இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

- இதற்கு மாற்றாக, இயக்க இலாப விகிதம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படலாம்.

**இயக்க இலாப விகிதம் = 100 - இயக்க அடக்க விலை விகிதம்**

**இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் - இயக்க அடக்க விலை**

### 4. விகித பகுப்பாய்வின் ஏதேனும் மூன்று நன்மைகள் தரவும்.

1) **செயல்பாடுகளின் செயல்திறனை அளவிடுகிறது:**
   - விகிதப் பகுப்பாய்வு, இயக்க அடக்கவிலை மற்றும் வருவாய்க்கும் இடையே உள்ள உறவை கண்டறிவதன் மூலமும், தற்போதைய விகிதங்களைக் கடந்த கால விகிதங்களுடன் ஒப்பீடு செய்வதன் மூலமும் செயல்பாடுகளின் செயல்திறனை அளவிடுகிறது.

2) **நிதி நிலையின் கடன் தீர்க்கும் திறனை அளவிடுகிறது:**
   - விகிதப் பகுப்பாய்வு, ஒரு வணிக நிறுவனத்தின் நீர்மைத் தன்மை அல்லது குறுகிய கால கடன் தீர்க்கும் திறன் மற்றும் நீண்டகால கடன் தீர்க்கும் திறனை அறிய உதவுகிறது.

3) **முதலீட்டு முடிவுகளுக்கு வழிவகை செய்கிறது:**
   - விகிதப் பகுப்பாய்வு இலாபகரமான முதலீட்டு வழிவகைகள் தொடர்பான பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு நிர்வாகத்திற்கு உதவுகிறது.

4) **இலாபத் தன்மையை ஆய்வு செய்கிறது:**
   - ஒரு வணிகத்தின் இலாபத்தன்மையை, விற்பனை மற்றும் முதலீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதற்கு விகிதப் பகுப்பாய்வு உதவுகிறது.

5) **நிறுவனத்திற்குள் ஒப்பீடு:**
   - ஒரு நிறுவனத்தின் வெவ்வேறு பிரிவுகளின் செயல்திறன் ஒப்பீடு அவை தொடர்பான விகிதங்களை ஒப்பிடுவதன் மூலம் சாத்தியமாகிறது.

6) **நிறுவனங்களுக்குள் ஒப்பீடு:**
   - ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டுத் திறனை, பிற நிறுவனங்களுடன் ஒப்பிடுவதற்கு, விகிதப் பகுப்பாய்வு உதவுகிறது.

### 5. விகித பகுப்பாய்வின் குறைபாடுகளைத் தரவும்.

( மிக குறுகிய வினாகளில் வினா எண் 5 - ன் பதிலை எழுதவும் )

# அலகு 10. கணினி கணக்கியல் முறை

## சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது
   அ) வழக்கமான கணக்கியல் அறிக்கை ஆ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை
   இ) இருப்பாய்வு ஈ) இருப்புநிலைக் குறிப்பு
2. F11 எனும் பயன்பாடு
   அ) நிறுவனப் பண்பு கூறுகள் ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்
   இ) நிறுவன கட்டமைப்பு ஈ) இவைகளில் எதுவும் இல்லை
3. குழுக்கள், பேரேடுகள் மற்றும் சான்றாவண வகைகளை Tally- யின் எந்த துணைப்பட்டியல் காண்பிக்கும்?
   அ) சரக்கிருப்பு சான்றாவணங்கள் ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்
   இ) நிறுவன தகவல் ஈ) கணக்கு தகவல்
4. Tally- ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடு(கள்)?
   (i) ரொக்கம் (ii) இலாப நட்டக் க/கு (iii) முதல் க/கு
   அ) (i) மட்டும் ஆ) (ii) மட்டும்
   இ) (i) மற்றும் (ii) இவை இரண்டும் ஈ) (ii) மற்றும் (iii) இவை இரண்டும்
5. எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?
   அ) தலைமைப் பதிவு
   ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்
   இ) அறிக்கைகள்
   ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது
6. Tally- ல் எது முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு?
   அ) அனாமத்து க/கு ஆ) கொடுபட வேண்டிய செலவு க/கு
   இ) விற்பனைக/கு ஈ) முதலீடுகள் க/கு
7. சம்பளக் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும்?
   அ) நேரடி வருமானங்கள் ஆ) நேரடி செலவினங்கள்
   இ) மறைமுக வருமானங்கள் ஈ) மறைமுக செலவினங்கள்
8. அலுவலகப் பயன்பாட்டிற்காக ₹. 25,000 வங்கியில் இருந்து எடுக்கப்பட்டது. எந்த வகை சான்றாவணத்தில் இந்த நடவடிக்கை பதியப்படும்?
   அ) எதிர்பதிவு சான்றாவணம் ஆ) பெறுதல்கள் சான்றாவணம்
   இ) செலுத்தல்கள் சான்றாவணம் ஈ) விற்பனை சான்றாவணம்
9. அறைகலன் கடனுக்கு வாங்கியதை Tally- ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்?
   அ) பெறுதல்கள் சான்றாவணம் ஆ) உரிய குறிப்பேடு சான்றாவணம்
   இ) கொள்முதல் சான்றாவணம் ஈ) பெறுதல்கள் சான்றாவணம்
10. Tally- யின் நுழைவாயிலிலிருந்து இருப்பாய்வை பார்வையிட எந்த விருப்பத் தேர்வு பயன்படும்?
    அ) Gateway of Tally -> Reports -> Trial Balance
    ஆ) Gateway of Tally -> Trial Balance
    இ) Gateway of Tally -> Reports -> Display -> Trial Balance
    ஈ) இவைகளில் ஏதுமில்லை

## விடைகள்

1. ஆ 2. அ 3. ஈ 4. இ 5. ஆ 6. ஆ 7. ஈ 8. அ 9. ஆ 10. இ

## மிகக் குறுகிய வினாக்கள்

### 1. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

- ❖ தானியங்கும் கணக்கியல் என்பது, கணக்கியல் மென்பொருள் உதவியுடன், கணக்கேடுகளை உடனடியாக பராமரிக்கும் அணுகு முறையாகும்.

### 2. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?

- ❖ கணக்கியல் அறிக்கையானது, ஒரு நிறுவனத்தின் கணக்கேடுகளில் இருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பு ஆகும்.
- ❖ கணக்கியல் அறிக்கைகளை, வழக்கமான அறிக்கைகள் மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் என வகைப்படுத்தலாம்.

### 3. ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகள் கூறு.

1) நாளேடு / குறிப்பேடு
2) பேரேடு
3) இருப்பாய்வு
4) இலாப அறிக்கை
5) இருப்பு நிலைக் குறிப்பு
6) ரொக்க ஓட்ட அறிக்கை

### 4. கணக்கியல் தகவல் அமைப்பு என்றால் என்ன?

- ❖ கணக்கியல் தகவல் அமைப்பு என்பது, நிதியியல் தரவுகளை சேகரித்து, அதை செயலாக்கப் பெறச்செய்து, பல்வேறு பயனர்களுக்கு தகவலாக அளிப்பதைக் குறிப்பதாகும்.

### 5. Tally.ERP 9- ல் குழு என்றால் என்ன?

- ❖ 2009 - ம் ஆண்டு Tally Solutions, Tally.ERP 9 எனும் மென்பொருளை அறிமுகம் செய்தது.
- ❖ இந்த மென்பொருள் விரிவான வணிக மேலாண்மைக்கு தீர்வு அளிக்கிறது.
- ❖ இது அனைத்து கணக்கேடுகளையும் பராமரிக்கும்.
- ❖ பெறுதல், செலுத்தல், விற்பனை, கொள்முதல் போன்ற பல்வேறு வகையான சான்றாவணங்களைப் பயன்படுத்தி நடவடிக்கைகளைப் பதிவு செய்யலாம்.

## குறுகிய வினாக்கள்

### 1. கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்.

- ❖ நடவடிக்கைகளின் விவரங்களை கொண்டுள்ள ஒரு ஆவணமே சான்றாவணம் ஆகும்.
- ❖ நடவடிக்கைகள், சான்றாவணப் பதிவுகள் மூலமே பதியப்படவேண்டும்.
- ❖ முன்பே வரையறுக்கப்பட்ட கொள்முதல், விற்பனை, செலுத்தல், பெறுதல் மற்றும் எதிர்ப்பதிவு போன்ற சான்றாவணங்களை Tally கொண்டுள்ளது.

**சான்றாவண வகைகளைப் பார்வையிட:**

Gateway of Tally > Masters > Accounts Info > Voucher Types > Display

- ❖ பயனரின் தேவைக்கேற்ப கூடுதல் சான்றாவண வகைகளை உருவாக்கலாம்.

### 2. Tally.ERP 9 - ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?

- ❖ முன்பே வரையறுக்கப்பட்ட ரொக்கம் மற்றும் இலாப நட்டக் க/கு ஆகிய இரண்டு பேரேடுகளை Tally கொண்டுள்ளது.
- ❖ மற்ற பேரேடுகளை, அவற்றின் தேவைக்கேற்ப பயனர் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

**<u>பேரேடு உருவாக்குவதற்கு:</u>**

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create


3. **Tally.ERP 9-ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.**
   i) பெறுதல் சான்றாவணம் / வரவு குறிப்பு (Receipt Voucher)
   ii) செலுத்தல் சான்றாவணம் / செலுத்தல் (Payment Voucher)
   iii) எதிர்ப்பதிவு சான்றாவணம் / கான்ட்ரா (Contra Voucher)
   iv) கொள்முதல் சான்றாவணம் / கொள்முதல் (Purchase Voucher)
   v) விற்பனை சான்றாவணம் / விற்பனை (Sales Voucher)
   vi) உரிய குறிப்பேடு சான்றாவணம் / ஜர்னல் (Journal Voucher)

4. **Tally.ERP 9-ல் இலாப நட்டக் கணக்கை எவ்வாறு பார்வையிடுவது என்பதை விளக்கவும்.**

F10: A/c Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)




5. **கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.**

1) **<u>கணக்கேடுகளைப் பராமரித்தல்:</u>**
   - கணினிமயக் கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும், திறம்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம்.
   - இதற்கு அதிகப்படியான இடவசதி தேவையில்லை.
   - தரவு மற்றும் தகவல்களை விரைவாகவும் துல்லியமாகவும் எடுக்க, இது வழிவகை செய்கிறது.

2) **<u>சரக்கிருப்பு மேலாண்மை:</u>**
   - கணினிமயக் கணக்கியல் முறை, திறம்பட்ட சரக்கிருப்பு மேலாண்மைக்கு, வழிவகை செய்கிறது.
   - வேகமாக நகரும், மெதுவாக நகரும் மற்றும் வழக்கொழிந்த சரக்கிருப்பை கண்டறியலாம்.
   - சரக்கிருப்பு, சரக்கிருப்பு அளவுகள் போன்றவற்றின் மேம்படுத்தப்பட்ட தகவல்களை உடனுக்குடன் எடுக்கலாம்.

3) **<u>சம்பளப் பட்டியல்தயாரித்தல்:</u>**

- ❖ சம்பளப்பட்டியலானது பணியாளர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகையினை கணக்கீடு செய்வதாகும்.
- ❖ பணியாளர்களின் சம்பளமானது, வேலை செய்த நேரம் அல்லது நாட்கள் அல்லது உற்பத்தி அலகுகள் அடிப்படையில் கணக்கிடப்படலாம்.
- ❖ கணினிமய கணக்கியல் முறை, பணியாளர்களின் வருகையைப் பதிகிறது, சம்பளத் தொகையைக் கணக்கிடுகிறது, சேமநல நிதி மற்றும் வருமான வரி போன்ற பிடித்தங்களையும் செய்கிறது.

4) **<u>அறிக்கை உருவாக்குதல்:</u>**

- ❖ கணினிமயக் கணக்கியல் முறை, பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் உருவாக்குவதற்கு உதவி புரிகிறது.

5) **<u>தரவு அனுப்புதல் / பெறுதல்:</u>**

- ❖ கணக்கியல் தரவு மற்றும் தகவல்களை, நிறுவனத்தின் உள்ளேயோ அல்லது நிறுவனத்திற்கு வெளியேவோ உள்ள, வேறு ஒரு பயனரிடம் இருந்து அனுப்பலாம் அல்லது பெறலாம்.

6) **<u>வரிவிதிப்பு:</u>**

- ❖ கணினிமயக் கணக்கியல் முறை, பல்வேறு வரிகளை கணக்கீடு செய்யவும், அதை பிடித்தம் செய்து, அரசாங்க கணக்கில் செலுத்துவதற்கும் உதவி புரிகிறது.